**திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழிநுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் பொறுப்பு – 2016**

---

திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழிநுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1986 இன் 3 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழிநுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு சட்டத்தின் 11(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழிநுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 21,221 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 705,128 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 683,907 இனால் வளர்ச்சி அடைந்திருந்தது. ஏனைய வருமானங்கள் ரூபா 269,822 இனால் மற்றும் கூட்டுத்தாபன பங்களிப்பு ரூபா 300,000 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றுகை

1986 இன் 03 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழிநுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்புச் சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழிநுட்பவியலாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதிய முறைமையொன்று தயாரித்தல், பரோபகார நிதியம், சேமிப்பு நிதியம், சேமிப்பு அல்லது சிக்கன சங்கங்கள் மற்றும் ஏனைய சமமான திட்டங்களை அமைத்தல்.

(ஆ) ஓய்வூதியம் ஒன்று, கடன் ஒன்று, படி ஒன்று, வீட்டு வசதியொன்று அல்லது ஏனைய சமமான நலன்ஒன்றினை அவருக்கு வழங்குதல்.

(இ) உடல்சார் அல்லது மனம்சார் பலவீனமொன்றிற்கு ஆளாகி தனது தொழிலில் ஈடுபடுவதற்கு முடியாதிருக்கும் போது, ஏதும் பண உதவி ஒன்று செய்தல், மரணச் செலவுகளுக்காக தொழிநுட்பவியலாளரின் விதவைக்கு, பெற்றோர்களில் ஒருவருக்கு அல்லது இளவயது பிள்ளை ஒருவருக்கு பணம் அல்லது வேறு உதவிகள் வழங்குதல் கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பின் முக்கிய குறிக்கோளாகும்.

மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பின் வருமானம் அதனது முக்கிய குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கும் போதிய மட்டத்தில் காணப்படாமையினால் எதிர்காலத்தில் அதனது குறிக்கோள்கள் நிறைவேற்றும் போது அதற்கான நிதியத்தை பெற்றுக்கொள்ளும் ஆபத்து நிலைமையொன்று காணப்படுகின்றமையினால் மாற்று நிதி வழங்கள் வழிகள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

(ii) 1998 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான 18 வருடங்களில் திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழிநுட்பவியலாளர்களுக்காக ஓய்வூதியம், மருத்துவ உதவி மற்றும் மரண உதவி என கூட்டுத்தொகை ரூபா 24,339,980 வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான ஓய்வூதியமாக ரூபா 1,374,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2016 திசெம்பர் 31 திகதி வரையும் திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழிநுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பின் கருமங்களுக்காக உரிய அமைச்சரினால் நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று நியமனம் செய்யாமையால் நலன்பெறுவோருக்காக சேமிப்பு நிதியம் நிறுவுதல், சிக்கனச் சங்கங்கள் ஏற்படுத்துதல், கடன் வழங்குதல், வீட்டு வசதிகள் பெற்றுக்கொடுத்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 4.2 தொழிற்படு செயற்பாடுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1986 இன் 03 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழிநுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்புச் சட்டத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகளின் பிரகாரம் பொறுப்பு நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்திற்காக பொறுப்பான நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று நியமனம் செய்ய வேண்டுமெனினும் 2013 ஆண்டு முதல் நம்பிக்கை பொறுப்புச் சபையொன்று நியமனம் செய்திருக்கவில்லை. அதன் காரணமாக நம்பிக்கை பொறுப்பின் விடயங்கள் தொடர்பாக பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஓய்வூதிய நலன்களைப் பெறும் கலைஞர் ஒருவர் அல்லது தொழிநுட்பவியலாளர் ஒருவர் இறந்த போது அவ் வெற்றிடத்திற்காக எதிர்ப்பார்ப்பு பட்டியலில் இருந்து தகைமையுடைய ஓய்வூதியம் பெறுவோர் ஒருவரை தெரிவு செய்தல் நாளது வரை நடைபெற்றிருக்கவில்லை.

(ii) நிதியத்தின் அங்கத்தவர் ஒருவர் உயிருடன் இருக்கிறார் என்பது தொடர்பாக முறையான உறுதிப்படுத்தும் நடைமுறையொன்றினை கடைபிடிக்காமல் மாதாந்தம் ஓய்வூதியக் கொடுப்பனவு வங்கியில் இடப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. மேலும் வங்கியில் போடப்படாமல் பணமாக பெறும் ஓய்வூதியம் பொறுப்பு ஒருவர் ரூபா 36,000 தொகையாக 18 மாதங்களில் ஓய்வூதியம் பெறுவதற்காக வந்திருக்காததுடன் குறிப்பிட்ட பணம் உரிமை கோரப்படாத ஓய்வூதிய ஒதுக்கக் கணக்கு ஒன்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளாமைக்கான காரணத்தை கண்டறிந்து அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் இது வரை நடைபெற்றிருக்கவில்லை.

(iii) நம்பிக்கை பொறுப்பு மூலம் வழங்கும் நலன்கள் தொடர்பாக கலைஞர்கள் மற்றும் தொழிநுட்பவியலாளர்களிடையே விளிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக எடுத்திருக்கும் செயற்பாடுகள் போதியளவினதாக காணப்படாமையால் புதிய நலன்பெறுவோர்களை நிதியத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) சட்டத்தின் 6.2(அ) இன் பிரகாரம் பொருத்தமான முறைகளைப் பயன்படுத்தி நிதியம் உழைப்பதற்காக இயலுமாக இருந்த போதிலும் அவ்வாறான ஆக்கபூர்வமான நிகழ்ச்சித் திட்டமொன்று அல்லது செயற்பாடு ஒன்று மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

2014 ஆண்டின் ஜனவரி முதல் மீளாய்வாண்டு இறுதி வரை கொடுப்பனவு செய்வதற்காக தெரிவு செய்திருந்த முறை குறிப்பாக சுட்டிக்காட்டி ஓய்வூதியம் பெறும் 15 கலைஞர்களுள் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 2,000 வீதம் கூட்டுத்தொகை ரூபா 1,080,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பொறுப்புச் சபை நியமனப்பட்டிருக்காமையால் இது தொடர்பாக சட்டத்தின் 6(2)(1)(இ) ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்புச் சபையின் அங்கீகாரமின்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2003 ஜுன் 02 திகதி மற்றும் பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிட்டு கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் நிறுவனத்தினால் 2016 ஆம் அண்டிற்கான கணக்குகள் 128 நாட்கள் தாமத்தின் பின்னர் 2017 ஜுலை 06 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழிநுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பு தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நம்பிக்கைப் பொறுப்பின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஓய்வூதியம் செலுத்துவதில் கட்டுப்பாடு | ஓய்வூதியம் பெறுவோர் உயிருடன் இருப்பதனை இனங்காண்பது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு ஒன்று காணப்படாமை மற்றும் எதிர்ப்பார்ப்பு பட்டியல் நாளது வரை ஆக்காமை. |
| (ஆ) நிதி முகாமைத்துவம் | ஓய்வூதியம் செலுத்துதல் மற்றும் மருத்துவ உதவி வழங்குவதற்கு ஏற்றவாறு போதியளவு நிதியத்தை அதிகரித்துக் கொள்ளாமை. |